குடமுழுக்குக்கு, திருப்பணிகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதுமாத்திரமல்லாமல், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு உபயதாரர்கள் தங்கள் சொந்தப் பணத்தை செலவு செய்து அதிகப்படியான திருப்பணிகள் செய்வதற்கு ஆர்வமாக வந்துகொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களால் வழங்கப்படுகின்ற நிதி முறையாக அந்தத் திருப்பணிகளுக்குச் செலவிடப்படுவதால் அதிகளவு உபயதாரர்களைப் பெற்று, கடந்த ஆண்டு மாத்திரம் 66 திருக்கோயில்களுக்கான திருப்பணிகளுக்கு உபயதாரர்களுக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அனுமதியளித்திருக்கிறது. அந்தவகையில் 66 திருக்கோயில்கள் என்று எடுத்துக்கொண்டால், ஒட்டுமொத்தமாக 113 திருக்கோயில்கள் கடந்த ஆண்டு திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு மீண்டும் தமிழக முதல்வர் அவர்கள் போதிய அளவில் நிதி தருவார்கள் என்ற நம்பிக்கையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன திருக்கோயில் திருப்பணி 2023–2024 ஆம் ஆண்டு நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்படும். அவர் கூடுதலாக திருமண மண்டபம், பக்தர்கள் தங்கும் விடுதி கேட்டார். முதலில் தெய்வத்திற்குத் திருப்பணியும், குடமுழுக்கும் இறுதி செய்வோம். அதன்பிறகு பக்தர்கள் தங்கும் விடுதியும், திருமண மண்டபத்தையும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை கருணையோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

அடக்கஸ்தலம்

***18946—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 1]

விருகம்பாக்கம் தொகுதி, 128-வது வார்டு, விருகம்பாக்கம் வேம்புலியம்மன் கோயில் தெருவில் உள்ள தமிழ்நாடு வக்ஃபுப் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் அடக்கஸ்தலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருகம்பாக்கம் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள் கேட்டுள்ள சென்னை, விருகம்பாக்கம், வேம்புலியம்மன் கோயில் தெருவில் உள்ள வக்ஃப் இடம் சென்னை மாவட்டம், திருவல்லிக்கேணி ரூர்ஷா மக்கான் வக்ஃபுக்குச் சொந்தமானதாகும். இந்த வக்ஃப், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் சென்னை வக்ஃப் வாரிய கண்காணிப்பாளரை நிர்வாக அலுவலராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி வக்ஃப் இடம் அமைந்துள்ள 3.35 ஏக்கர் நிலம் வருவாய்த் துறை ஆவணங்களின்படி நீர் நிலையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அவ்விடத்தில் நீர் நிரம்பிய குளம் ஒன்று உள்ளது. சுற்றியுள்ள குடியிருப்புகளில் உள்ள மக்களுக்கு இக்குளம் நீர் ஆதாரமாக விளங்குகிறது. எனவே, இத்தகைய நிலத்தில் அடக்கஸ்தலம் அமைக்க வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் வேறு ஏதாவது இடத்தைச் சுட்டிக்காட்டினால் அங்குள்ள வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அடக்கஸ்தலம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.*

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, வேம்புலியம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான இடம் 3.35 ஏக்கர் இருக்கிறது. அதில் குளம் என்பது 2 ஏக்கரில் மட்டும்தான் இருக்கிறது. மீதி இருக்கக்கூடிய 1.35*

ஏக்கர் காலி இடமாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் வந்து ஆய்வு செய்து, மீண்டும் அதைப் பரிசீலனை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தக் குளத்தில் மழைக்காலங்களில் அவ்வப்போது அதிகமான வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. அது சாலையில் பெருக்கெடுத்து ஓடுவதால், அங்குள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அந்த குளத்தைத் தூர்வாரி, சுத்தம் செய்து, நவீனப்படுத்தி, அதைச் சுற்றி சிறு நடைப்பாதை அமைத்துத் தரப்படுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கை நியாயமானது. அதேநேரத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டமாக அரசு புறம்போக்கு நிலங்களில் கபர்ஸ்தலம் மற்றும் கல்லறைத் தோட்டங்கள் அமைக்க, அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கையினை மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய இடங்களைப் பெற்றுத்தருவது, அந்தப் பகுதியில் இடம் இல்லை என்று சொன்னால் தனியாருக்குச் சொந்தமான இடத்தினை பேச்சுவார்த்தை மூலமாகப் பெறுவதற்கு அரசாங்கம் சார்பாக, துறை சார்பாக பங்களிப்பு அளிப்பதற்காக தலா ஒரு கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். அதையும் மன்ற உறுப்பினர்கள் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்புள்ளது. எனவே, மன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதை நேரடியாக ஆய்வு செய்து தேவையான அளவிற்கு இடம் இருந்தால் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.*

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அங்கு மீதியுள்ள இடத்தில் அந்தத் தொகுதியில் உள்ள இமாம்களுக்கும், மோதினார்களுக்கும் தங்கும் விடுதி கட்டித் தரப்படுமா? மேலும், இமாம்களுக்கு*

2023 ஏப்ரல் 1]
சிறுபான்மையினர் நலத் துறையின்மூலம் தரப்படும் scooter *பெறுவதற்கான வயது வரம்பு நீட்டித்துத் தரப்படுமா? மேலும் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அரணாக இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இமாம்களுக்கு ரூ.3,000/– ஓய்வூதியத்தை வழங்கிக்கொண்டிருக்கிறார். அரசின் நிதி நிலைமைக்கேற்ப அது உயர்த்தித் தரப்படுமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடியது.* Scooter *மானியத்தோடு வழங்குவதற்கான நிதியினை ஒதுக்கி அளித்துள்ளோம். யார், யார் அதற்கு முன்வருகிறார்களோ அவர்களுக்கு அளித்து வருகிறோம். வயது வரம்பையும் இப்போது தளர்த்தி வழங்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், குளம் சீரமைக்கின்ற பணியும் அங்கே இருக்கின்ற பணியாளர்களுக்கு வீடு கட்டுகின்ற பணியும் தற்போது பரிசீலனையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) தனி கேள்வி போடுங்கள், பதில் தர சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மைக் கொடுங்கள்.*

100—

உண்டி உறைவிடப் பள்ளி

***46460—திரு. இரா. அருள்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—